DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 47/2022

PROSECUTION WITNESS No - PW- 1

| | | | |
|---|---|---|---|
| Name : | முருகேஸ்வரி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of October 2024.

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சிவகங்கை தாலுகா தமராக்கி தெற்கில் குடியிருந்து வருகிறேன். இறந்துபோன போதுராஜ் எனது கணவர். எனக்கு 1 மகளும் 1 மகனும் உள்ளார்கள். எனது கணவர் விவசாய வேலை தான் செய்து வந்தார். சுமார் 5 மாதங்கள் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்று விட்டு திரும்பி உள்ளூருக்கு வந்தார். முதல் எதிரி லெட்சுமி, எங்கள் ஊர் தான் அவரை எனக்கு நன்றாக தெரியும். 2ம் எதிரியை நான் சிவகங்கை செல்லும்போது அவ்வப்போது பார்த்திருக்கிறேன். இந்த வழக்கில் புகார் நான் தான் கொடுத்தேன்.

10. 03.2020 ம் தேதி மாலை 4.00 மணியளவில் எனது கணவரும் எனது அக்காவின் கணவர் கணேசனும் மேலூர் அருகில் உள்ள திருவாதவூருக்கு பூக்குழி மற்றும் மாட்டு ரேஸிற்காக இருவரும் சென்றார்கள். இரவு 10.00 மணியளவில் என் கணவருக்கு போன் செய்தபோது அவரது போனும் சுவிட்ச் ஆப் என வந்தது. எனவே நான் எனது அக்கா வீட்டுக்காரரான கணேசனுக்கு போன் செயதேன். கணேசன் போன் எடுத்து எனது கணவர் முன்னரே கிழம்பிவிட்டார் என்றும் தான் நாடகம் பார்த்துவிட்டு ஊர் திரும்புமாறு என்னிடம் சொன்னார். மீண்டும் மறுநாள் காலை 11.03.2020ம் தேதியன்று எனது கணவருக்கு விடியற்காலை 5.00 மணிக்க போன் செய்து பார்த்தபோது மீண்டும் அதே போல் சுவிட்ச் ஆப் என வந்தது. எனது போன் நம்பர் 9159185791. எனது கணவர் தற்போது என்னால் மனப்பாடமாக சொல்லயியலவில்லை. எனது போனில் பதிவிறக்கம் செய்து வைத்துள்ளேன். பார்த்து சொல்லமுடியும்.

SWARNAM J NATARAJAN Digitally signed by SWARNAM J NATARAJAN Date: 2024.10.15 17:31:31 +0530

உடனே எனது கணவரை தேடிச்செல்வதற்கு எனது அக்கா கணவர் கணேசன், எனது தம்பி ரவிக்குமார், எனது மாமா அசோக்மேத்தா ஆகியோர்களை அனுப்பி அக்கம்பக்கத்தில் தேடிப்பார்த்தேன். எனது கணவர் இவ்வாறு வெளியில் சென்றால் உடனடியாக வந்துவிடுவார் அவ்வாறு வராததால் நான் பயந்து கொண்டு தேடச்சொன்னேன். 12ம் தேதி வரை எனது கணவரை பல இடங்களில் தேடிப்பார்த்து அவர் கிடைக்காததால் அவர் கா ணவில்லை என தாலுகா காவல்நிலையம் சென்று 12ம் தேதி புகார் கொடுத்தேன். 13ம் தேதி எனது கணவரை தொடர்ந்து தேடிக்கொண்டிருக்கும்போது எங்கள் உரைச்சேர்ந்த சங்கர், மாரியப்பன் இருவரும் எனது கணவரை 10ம் தேதி முதல் எதிரி அண்ணலெட்சுமி வீட்டில் வைத்து பார்த்தாகவும் அவருடன் சண்டை போட்டுக்கொண்டிருந்த விவரத்தை என்னிடம் சொன்னார்கள்.

அண்ணலெட்சுமியின் வீடு சஞ்சை நகரில் உள்ளது. அண்ணலெட்சுமி என் ஊரைச்சேர்ந்தவர் தான் எனது கணவருடன் சிறுவயது முதல் பழக்கத்தில் இருந்துள்ளார். அந்த விவரம் எனக்கு அப்போது தெரியாது. மாலை 6.00, 6.45 மணியளவில் சங்கர், மாரியப்பன் இருவரும் எனது கணவர் சஞ்சை நகரில் அண்ணலெட்சுமி வீட்டிற்கு பக்கத்தில இறந்து கிடப்பதாக சொல்லி என்னை அழைத்து சொன்னார்கள். எனது கணவரின் பிரேதம் சஞ்சை நகரில் அண்ணலெட்சுமி வீட்டிற்கு மேற்குப்புரம் அவரது வீட்டின் ஜன்னல் ஒட்டி வெளியில் இருந்தது. 100க்கணக்கான பேர் அங்கு கூடியிருந்தார்கள்.

நான் என் கணவரை பார்த்தபோது காவிவேட்டி, வெள்ளை சட்டை அணிந்து இறந்து கிடந்தார். நான் பார்த்தவகையில் எனது கணவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை. அண்ணலெட்சுமி வீடு மாடி வீடு. அண்ணலெட்சுமியின் வீட்டின் மேற்குபுரம் செடிகளும், எதிரே காலியிடம் தான் இருந்தது. பிறகு எனது கணவர் அசோக்மேத்தாவை அழைத்துக்கொண்டு சிவகங்கை நகர் காவல்நிலையத்திற்கு சென்று மீண்டும் புகார் கொடுத்தேன். புகாரில் எனது கணவரின் இறப்பிற்கு காரணம் முதல் எதிரி லெட்சுமி தான் என எனக்கு சந்தேகம் இருப்பதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன்.

அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் பேசியதன் அடிப்படையில் 1ம் எதிரி அண்ணலெட்சுமியும், 2ம் எதிரி லிங்கப்பாண்டியும் சேர்ந்து என் கணவரை கொலை செய்தார்கள் என்ற விவரம் தெரிந்துகொண்டேன். என் கணவரின் உடல் ஊதிய நிலையில் இருந்தது. அவர் அணிந்திருந்த காவிவேட்டி, வெள்ளைசட்டை அவர் அணிந்திருந்த கால்சட்டை ஆகியவற்றை வைத்து பிரேதம் எனது கணவருடையதுதான் என உறுதி செய்து கொண்டேன் பிரேதம் அடையாளம் பார்க்க முடியாத அளவிற்கு

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.15 17:31:43 +0530

உருமாறி இருந்தது. எனவே அங்கிருந்த துணிகளின் உதவியுடன் அடையாளம் கண்டுகொண்டேன். எனது கணவர் அணிந்திருந்த துணிகளை காட்டினால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். (மானாமதுரை நீதித்துறை நடுவர் எண்.1 சிவகங்கையிலிருந்து வழக்கு சம்மந்தப்பட்ட சொத்துக்கள் இன்னும் ஆஜர் செய்யப்படவில்லை மேற்கண்ட காரணத்திற்காக சான்றுப்பொருட்கள் தற்போது குறியிட முடியவில்லை.) மேற்கண்ட விவரங்களை நான் போலீசார் விசாரிக்கும்போது சொன்னேன். காவல்நிலையத்தில் நான் கொடுத்த புகார்தான் **அ.சா.ஆ.1.** குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:** எதிரி தரப்பில் போதிய அவகாசம் வழங்கியும் ஆகஸ்ட் மாதம் சாடசி விசாரணைக்கு வழக்கு எடுத்துக்கொள்ளப்படும் விவரம் எதிரிக்கு ெ தரிவித்தும் இன்றை ய தேதிவரை எதிரிகள் வழக்கறிஞர் நியமிக்காமல் காலம் தாழ்த்தி வந்ததால் சட்டப்பணிகள் ஆணைக்குழு வாயிலாக சட்டமைய உதவி வழக்கறிஞர் நியமிக்க உத்தரவிட்டு வழக்கறிஞருக்கு குறுக்குவிசாரணை செய்ய அவகாசம் வழங்கியதன் பேரில் குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கபப்டுகிறது.

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.15 17:31:50 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 47/2022

PROSECUTION WITNESS No - PW- 2

| | | | |
|---|---|---|---|
| Name : | மாரியப்பன். | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of October 2024.

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1) நான் தமராக்கி தெற்கு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆசாரி வேலை செய்து வருகிறேன். அசா.1 முருகேஸ்வரியை எனக்கு தெரியும். அவரது இறந்துபோன போதுராஜை தெரியும். எனக்கு ஆஜர் எதிரிகள் அண்ணலெட்சுமி லிங்கபாண்டி இருவரை தெரியும். இருவரும் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் தான். போதுராஜ் ஆரம்பத்தில் வெளிநாட்டில்வேலை செய்து வந்தார். உள்ளுருக்கு திரும்பி வந்தபிறகு அவர் வேலைக்கு எங்கும் செல்லவில்லை. போதுராஜ் முதல்எதிரி அண்ணலட்சுமி வீட்டிற்கு போகவர பழக்கத்தில் இருந்தார். என்ன காரணம் என்று எனக்கு தெரியாது. ஆனால் அவர் வீட்டிற்கு போகவர இருந்தார்.

13ம் தேதி சுமார் 4 வருடத்திற்கு முன்பு மாதம் ஞாபகமில்லை. போதுராஜ் இறந்துகிடந்த இடத்தில் போலீசார் விசாரித்தபோது நான் 3 நாட்களுக்கு முன்னர் வேலைக்கு செல்லும்போது இரவு 9.00மணியளவில் நான் வேலை பார்த்த சம்பளம் வாங்க அந்த பகுதிக்கு செல்லும்போது போதுராஜா கையில் ஒரு பொட்டலத்தை வைத்துக்கொண்டு முதல் எதிரி அண்ணலட்சுமி வீட்டிற்கு முன்பு நின்று கொண்டிருந்ததை பார்த்தேன். ஆஜர் எதிரிகள் இருவரும் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். ஒரு அரை மணிநேரம் கழித்து நான் மீண்டும் திரும்பி வந்தபோது எதிரிகள் இருவரும் போதுராஜாவுடன் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். வாய் சண்டை தான் போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் அ ருகில் சென்று என்ன காரணம் என்று கேட்டு சமாதானம் செய்யவில்லை. உள்ளுர் காரர்கள் ஏதேனும் பேசிக்கொண்டிருப்பார்கள் என

SWARNAM J NATARAJAN Digitally signed by SWARNAM J NATARAJAN Date: 2024.10.15 17:32:05 +0530

நினைத்து நான் வந்துவிட்டேன். நான் அவர்களை சம்பவத்தன்று பார்த்தவிவரத்தை போலீசார் என்னை விசரிக்கும்போது தகவல் சொன்னேன். நான் அசா.1 முருகேஸ்வரியிடம் இது சம்மந்தமான விவரங்களை சொன்னேன். நான் தகவல் சொன்னபிறகு தான் முருகேஸ்வரி புகார்கொடுக்க சென்றார். நான் சம்பளம் வாங்க சென்றபோது என்னுடன் சாட்சி சங்கர் என்பவரும் அன்றைய தினம் உடன் வந்திருந்தார். அந்த சமயம் ஆஜர் எதிரிகள் சண்டை போட்டுக்கொண்டிருந்ததை பார்த்தார். தற்போது சங்கர் உயிருடன் இல்லை. 9 மாதங்களாகிறது. இது சம்மந்தமாக போலீசார் விசாரிக்கும்போது மேற்கண்ட விவரங்களை சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எதிரி தரப்பில் போதிய அவகாசம் வழங்கியும் ஆகஸ்ட் மாதம் சாடசி விசாரணைக்கு வழக்கு எடுத்துக்கொள்ளப்படும் விவரம் எதிரிக்கு ெ தரிவித்தும் இன்றை ய தேதிவரை எதிரிகள் வழக்கறிஞர் நியமிக்காமல் காலம் தாழ்த்தி வந்ததால் சட்டப்பணிகள் ஆணைக்குழு வாயிலாக சட்டமைய உதவி வழக்கறிஞர் நியமிக்க உத்தரவிட்டு வழக்கறிஞருக்கு குறுக்குவிசாரணை செய்ய அவகாசம் வழங்கியதன் பேரில் குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கபப்டுகிறது.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.15 17:32:17 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 47/2022

PROSECUTION WITNESS No - PW- 3

| | | | |
|---|---|---|---|
| Name : | அசோக்மேத்தா | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of October 2024.

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

**<u>முதல் விசாரணை :</u>**

1) நான் குமாரப்பட்டி தமராக்கிதெற்கு சிவகங்கை தாலுகாவில் வசித்து வருகிறேன். நான் விவசாயவேலை செய்து வருகிறேன். சாட்சி ரவிக்குமார் எனது உறவினர். எனது ஊரைச்சேர்ந்தவர். அசா.1 முருகேஸ்வரி எனது சின்னமாமியாரின் மகள். அவரது கணவர் போதுராஜையும் எனக்கு தெரியும். ஆஜர் எதி ரிகள் இருவரையும் தெரியும். அவர்கள் அண்ணலெட்சுமி, மற்றும் லிங்கபாண்டி. அண்ணலட்சுமி தமராக்கி தெற்கு. லிங்கபாண்டி எங்கள் ஊருக்கு பக்கத்தில் உள்ள கூவானிபட்டியைச் சேர்ந்தவர்.

10.03.2020ம் தேதியன்று வழக்கில் இறந்துபோன போதுராஜா திருவாதவூருக்கு ரேக்ளாரேஸ் பார்ப்பதற்கு சென்றார். அவருடன் மற்றொருவர் சென்றிருந்தார் மற்றொருவர் பெயர் தற்போது எனக்கு ஞாபகமில்லை. முருகேஸ்வரி தனது கணவர் இரவு 9.00, 10.00 மணிவரை ஊர் திரும்பாததால் அவருக்கு போன் செய்து பார்த்துள்ளார். அவர் போன் சுவிட்ச் ஆப் என வந்ததால் உடன் சென்ற நபருக்கு தொலைபேசியில் அழைத்துள்ளார். போதுராஜ் ரேஸ் முடிந்தவுடன் ஊர் திரும்பி விவரத்தை அந்த நபர் முருகேஸ்வரிக்கு சொல்லியுள்ளார். மறுநாள் முருகேஸ்வரி இது சம்மந்தமாக தகவல் சொல்லி நாங்கள் அக்கம்பக்கத்தில:போதுராஜாவை தேடினோம். நான் ரவிக்குமார், கணேசன் இன்னும் சிலர் போதுராஜாவைதேடினோம். 2 நாட்களாகியும் அவரை பற்றி தகவல் எதுவும் கிடைக்காததால் 12ம்தேதி தாலுகா காவல்நிலையத்தில முருகேஸ்வரி இது சம்மந்தமாக புகார் கொடுத்தார். போலீசார் எங்களையும் தொடர்ந்து தேடச்சொன்னதன் பேரில் நாங்கள் தேடிவந்தோம்.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.15 17:32:27 +0530

13ம் தேதி மாலை 5.00, 5.30 மணியளவில் சஞ்சை நகரில் ஒரு பிரேதம் இருப்பதாக தகவல் கிடைத்ததன் பேரில் சஞ்சை நகருக்கு நான் சென்றேன். சம்பவயிடத்தில் ஒரு ஆண் பிரேதம் குப்புற படுத்த நிலையில் அழுகிய நிலையில் இருந்தது. நான் உடனே முருகேஸ்வரிக்கு தகவல் சொன்னேன். பிரேதம் அண்ணலெட்சுமி குடியிருந்த வீட்டிற்கு பக்கத்தில் இருந்தது. நான் அங்கு செல்லும்போது அண்ணலெட்சுமி வீடு பூட்டப்பட்டிருந்தது. முருகேஸ்வரி சம்பவயிடத்திற்கு வந்து பிரேதத்தை பார்த்து தனது கணவரின் பிரேதம் என அடையாளம் காட்டினார். அக்கம் பக்கத்தில் விசாரித்தபோது அண்ணலெட்சுமி வீடு 2, 3 நாட்களாக பூட்டியிருப்பதாக தகவல் சொன்னார்கள்.

சிவகங்கை டவுன் காவல்நிலையத்தில் நான் ரவிக்குமார் இருவரும் முருகேஸ்வரியுடன் சென்று புகார் கொடுத்தோம். முருகேஸ்வரி சொல்லச்சொல்ல நான் புகார் எழுதினேன். நான் எழுதிய புகார்தான் **அ.சா.ஆ. 2**. குறியீடு செய்யப்படுகிறது. இறந்துபோனவர் அணிந்திருந்த வேட்டி,சட்டை, பணியன் ஆகியவற்றை வைத்து இறந்துபோனவர் போதுராஜ் என்று முருகேஸ்வரி அடையாளம் காட்டினார். நாங்கள் இருவரும் அழுதுகொண்டிருக்கும்போது சாடசி 2 மாரியப்பன், போதுராஜை 10ம் தேதி அண்ணலெட்சுமி வீட்டு வாசலில் பார்த்ததாக தகவல் தெரிவித்தார். அவர்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டதை பார்த்ததாக தெரிவித்தார். எனவே மேற்கண்ட எதிரிகள் தான் இந்த சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம் என சந்தேகத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

அண்ணலெட்சுமியும் இறந்துபோன போதுராஜும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள். முதல் எதிரி அண்ணலெட்சுமிக்கும்போதுராஜ்க்கும் திருமணத்திற்கு பிறகு தொடர்பிருந்தது என்ற விவரம் முருகேஸ்வரி சொல்லி தெரிந்துகொண்டேன். நான் பக்கத்து ஊர் காரர் என்பதால் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எதிரி தரப்பில் போதிய அவகாசம் வழங்கியும் ஆகஸ்ட் மாதம் சாடசி விசாரணைக்கு வழக்கு எடுத்துக்கொள்ளப்படும் விவரம் எதிரிக்கு செ தரிவித்தும் இன்றை ய தேதிவரை எதிரிகள் வழக்கறிஞர் நியமிக்காமல் காலம் தாழ்த்தி வந்ததால் சட்டப்பணிகள் ஆணைக்குழு வாயிலாக சட்டமைய உதவி வழக்கறிஞர் நியமிக்க உத்தரவிட்டு

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.15 17:32:34 +0530

வழக்கறிஞருக்கு குறுக்குவிசாரணை செய்ய அவகாசம் வழங்கியதன் பேரில் குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்பட்டுகிறது.

<u>**மறு விசாரணை**</u>. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.15 17:32:42 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No.47/2022

PROSECUTION WITNESS No - PW-4

| | | | |
|---|---|---|---|
| Name : | ரவிக்குமார் | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of October 2024.

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது தமராக்கி தெற்கு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். எலக்ட்ரிக்கல் வேலை செய்து வருகிறேன். சாட்சி முருகேஸ்வரி எனது அம்மாவின் உடன்பிறந்த தங்கையின் மகள். அவரது கணவர் போதுராஜ் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். முதல் எதிரி பெயர் லெட்சுமி, 2ம் எதிரி பெயர் லிங்கம். அவர் ஆட்டோ ஓட்டுகிறார். இருவரும் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் தான்.

கடந்த 10.03.2020ம் தேதியன்று திருவாதவூர் ரேஸிற்கு கணேசனும், போதுராஜாவும் சென்றிருந்தார்கள். இரவு 10.00 மணியளவில் புகார்தாரர் முருகேஸ்வரி என்னை அழைத்து தனது கணவர் வீடு திரும்பவில்லை என தகவல் தெரிவித்தார். நாங்கள் போதுராஜிற்கு போன் செய்யும்போது போன் செல்லவில்லை. அவருடன் சென்ற கணேசனை தொடர்புகொண்டு பார்த்தபோது போதுராஜ் அப்போதே கிளம்பிவிட்டார் என்றும், தகவல் தெரிவித்தார். கணேசன் நாடகம் பாாத்த்துவிட்டு சொன்னதால் போதுராஜா கிளம்பிவிட்டதாக தகவல் சொன்னார். இருட்டியதால் எங்களால்போதுராஜாவை தேடமுடியவில்லை.

மறுநாள் காலையும் தொடர்ந்து போன் செய்து பார்த்தபோது போன் போகவில்லை என்பதால் எங்களுக்கு பதட்டம் ஆகி அவர் எங்கெல்லாம் போவார் என தெரிந்துகொண்டு அந்த இடங்களுக்கு சென்று தேடினோம். மாலை வரை அவரை பார்த்ததாக யாரும் தகவல் சொல்லவில்லை. 12ம் தேதி அவர் கா ணவில்லை என தாலுகா காவல்நிலையம் சென்று முருகேஸ்வரி புகார் கொடுத்தார். உள்ளூர் வாசிகள் எல்லோரும் போதுராஜாவை

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.15 17:32:51 +0530

தேடினோம். 13ம் தேதி மாலை 4.00, 4.30 மணிக்கு போதுராஜ், சஞ்சை நகரில் இறந்துகிடப்பதாக தகவல் கிடைத்தது. நானும் உள்ளூர்காரார்கள் எல்லோரும் சேர்ந்து அங்கு சென்று பார்த்தோம். நான் சென்று பார்த்தபோது அவர் அணிந்திருந்த காவிவேட்டி, மற்றும் வெள்ளை சட்டை வைத்து பிரேதம் எங்களால் அடையாளம் காண முடிந்தது. பிரேதம் இருந்த இடம் முதல் எதிரி அண்ணலட்சுமி வீட்டின் படிக்கட்டு பக்கத்தில் இருந்தது. காவிவேட்டியால் கழுத்து இறுக்கப்பட்ட நிலையில் பிரேதம் இருந்தது.

அக்கம்பக்கத்தில் அண்ணலெட்சுமியை விசாரித்தபோது அவர் 3 நாட்களாக வீடு பூட்டப்பட்டு இல்லை என தெரிவித்தார்கள். நாங்கள் அழுதுகொண்டிருந்தபோது எங்கள் ஊரைச்சேர்ந்த சங்கர் மற்றும் மாரியப்பன் அங்கு வந்தார்கள். அவர்கள பார்த்த சமயத்தில் ஆஜர் எதிரிகள் இருவரும் இறந்துபோன போதுராஜர் கையில் பொட்டலத்துடன் இருந்தார் என்றும் அவர்களுக்கிடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது என்றும் உள்ளூர்காரார்கள் வழக்கம்போல எதோ சண்டை போட்டுக்கொள்கிறார்கள் என நினைத்து வந்துவிட்டதாக தகவல் சொன்னார்.

இது சம்மந்தமாக டவுன் காவல்நிலையத்தில் நாங்கள் புகார்தெரிவித்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார். போலீசார் விசாரணையில் 3 நாட்களாக அண்ணலெட்சுமியை காணாததால் அவர் மீது சந்தேகம் ஏற்பட்டு அவர் தான் இந்த சம்பவத்தில் ஈடுபட்டிருப்பார் என தெரிவித்திருக்கோம்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எதிரி தரப்பில் போதிய அவகாசம் வழங்கியும் ஆகஸ்ட் மாதம் சாடசி விசாரணைக்கு வழக்கு எடுத்துக்கொள்ளப்படும் விவரம் எதிரிக்கு ெ தரிவித்தும் இன்றை ய தேதிவரை எதிரிகள் வழக்கறிஞர் நியமிக்காமல் காலம் தாழ்த்தி வந்ததால் சட்டப்பணிகள் ஆணைக்குழு வாயிலாக சட்டமைய உதவி வழக்கறிஞர் நியமிக்க உத்தரவிட்டு வழக்கறிஞருக்கு குறுக்குவிசாரணை செய்ய அவகாசம் வழங்கியதன் பேரில் குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கபப்டுகிறது.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.15 17:33:13 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 47/2022

PROSECUTION WITNESS No - PW- 5

| | | | |
|---|---|---|---|
| Name : | பாலமுருகன் | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of October 2024.

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது தமராக்கி தெற்கு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்தபோன போதுராஜாவை எனக்கு தெரியும். அவரது மனைவி முருகேஸ்வரியை தெரியும். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். அண்ணலெட்சுமி எனது ஊரைச்சேர்ந்தவர்.

கடந்த 10.03.2020ம் தேதியன்று இரவு 8.00 மணியளவில் நானும் பெருமாள் என்பவரும் சிவகங்கைக்கு வந்துவிட்டு சஞ்சை நகர் வழியாக எனது ஊருக்கு சென்றோம். அப்போது இறந்துபோன போதுராஜா டாமின் ஆர்ச் வழியே அவரது இருசக்கர வாகனத்தை நிறுத்தி தனது தொலைபேசியில் போன் பேசிக்கொண்டிருந்தார். அதை நான் பார்த்தேன். அதற்கு பின் 2 நாட்களாக அவரை காணவில்லை என தேடிக்கொண்டிருந்த விவரம் எனக்கு தெரிந்தது. 13ம் தேதி அவர் இறந்துவிட்டதாகவும் அவர் கொலை செய்யப்பட்டு இறந்ததாக கேள்விபட்டேன். அவரது குடும்பத்தார் விசாரித்தபோது 10ம் தேதி இரவில் டாமிங் அருகே அவர் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்ததை பார்த்த விவரத்தை சொன்னேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார். நான் பார்த்த விவரத்தை சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

எதிரி தரப்பில் போதிய அவகாசம் வழங்கியும் ஆகஸ்ட் மாதம் சாடசி விசாரணைக்கு வழக்கு எடுத்துக்கொள்ளப்படும் விவரம் எதிரிக்கு ெ தரிவித்தும் இன்றை ய தேதிவரை எதிரிகள் வழக்கறிஞர் நியமிக்காமல் காலம் தாழ்த்தி வந்ததால் சட்டப்பணிகள்

SWARNAM J NATARAJAN Digitally signed by SWARNAM J NATARAJAN Date: 2024.10.15 17:33:23 +0530

ஆணைக்குழு வாயிலாக சட்டமைய உதவி வழக்கறிஞர் நியமிக்க உத்தரவிட்டு வழக்கறிஞருக்கு குறுக்குவிசாரணை செய்ய அவகாசம் வழங்கியதன் பேரில் குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கபப்டுகிறது.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.15 17:33:30 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 47/2022

PROSECUTION WITNESS No - PW- 6

| | | | |
|---|---|---|---|
| Name : | வேலுசுப்பையா | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of October 2024.

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

<u>முதல் விசாரணை :</u>

1) நான் சஞ்சைநகரில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். வழக்கு சம்பவயிடத்தில் போலீசார் சம்பவயிடத்தை பார்த்து அவர்கள் தயாரித்த ஆவணங்களில் நாங்கள் கையொப்பமிட்டோம். எங்கள் முன்னிலையில் பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்ககூடிய ஆவணங்கள் இரண்டிலும் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பார்வைமகஜரில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.2** . குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ. 3.** குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட ஆவணத்தில் என் எழுதபப்ட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது வீட்டருகில் வைத்து போலீசார் என்னிடம்ட கையெழுத்து வாங்கினார்கள். நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவயிடத்திவல் போலீசார் விசாரித்துக்கொண்டிருக்கும்போது ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்த்து பார்வைமகஜர் தயார் செய்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு எழுதிய மகஜரில் நான் சாட்சி கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல. இறந்தநபர் சம்பவ சமயத்தில ் அணிந்திருந்ததாக சொல்லும் வெள்ளை முண்டாபணியன், வெள்ளை அரைக்கை சட்டை, உடைந்த சிவப்புக்கலர் வளையல் துண்டுகள் 2 ஆகியவற்றை போலீசார் அத்தாட்சியில் கைப்ற்றினார்கள் அவ்வாறு கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருட்களுக்கு நான் உடனிருந்து சாட்சி கையெழுத்து போடடேன் என்றும் முதல்

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.15 17:33:40 +0530

எதிரி என் ஊரைச்சேர்ந்தவர் என்பதால் அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றும் எண்ணத்தில் உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எதிரி தரப்பில் போதிய அவகாசம் வழங்கியும் ஆகஸ்ட் மாதம் சாடசி விசாரணைக்கு வழக்கு எடுத்துக்கொள்ளப்படும் விவரம் எதிரிக்கு தெரிவித்தும் இன்றைய தேதிவரை எதிரிகள் வழக்கறிஞர் நியமிக்காமல் காலம் தாழ்த்தி வந்ததால் சட்டப்பணிகள் ஆணைக்குழு வாயிலாக சட்டமைய உதவி வழக்கறிஞர் நியமிக்க உத்தரவிட்டு வழக்கறிஞருக்கு குறுக்குவிசாரணை செய்ய அவகாசம் வழங்கியதன் பேரில் குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.15 17:33:49 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை